பக்கங்கள் 16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 26 திங்கட்கிழமை 09.06.2025 | அதிர்வு 309

## ஆற்றில் தவறி வீழ்ந்து 6 வயது சிறுவன் சாவு!

### காத்தான்குடியில் சோகம்

மட்டக்களப்பு, காத்தான்குடி – 05, பழைய கல்முனை வீதியைச் சேர்ந்த 6 வயது சிறுவன் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் காத்தான்குடி 02 ▶



# செம்மணி மனிதப் புதைகுழி குறித்து உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்

## அரசு விசேட கரிசனை என்று நீதி அமைச்சர் தெரிவிப்பு

"யாழ்ப்பாணம், செம்மணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதப் புதைகுழி அகழ்வு குறித்து அரசு விசேட கரிசனை கொண்டுள்ளது. இந்த மனிதப் புதைகுழி தொடர்பில் உண்மைகள்கண்டறியப்படவேண்டும்."

- இவ்வாறு நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 19 எலும்புக் கூடுகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயம் சம்பந்தமாக அரச தரப்பின் நிலைப்பாடு குறித்து வினவிய போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 02 ▶

### 23ஆம் திகதி இலங்கை வரும்

# ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வடக்கு நிலைமையை நேரில் ஆராய்வார்

இலங்கைக்குப் பயணம்மேற்கொள்ளவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், வடக்குக்கும் நேரில் வந்து நிலைமைகளை ஆராயவுள்ளார்.

இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், மலையக மக்களின் நிலை பற்றியும் இலங்கைப் பயணத்தின் போது அவர் அவதானம் செலுத்துவார் என எதிர்பார்க்கப் படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க், எதிர்வரும் 23ஆம் திகதி 02 ▶






முன்னைய அரசுகளின் காலத்தில் இடம் பெற்ற ஊழல்கள் பற்றிய விவரங்கள் இப்போது மெல்ல மெல்ல ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கி இருக்கின்றன. அந்த வரிசையில் இது ஒன்று.

ஒவ்வொன்றும் சுமார் பதினேழரை லட்சம் ரூபா பெறுமதியான பதினைந்தாயிரம் உயர் ரக கறவை மாடுகளை ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் சுமார் 175 கோடி ரூபா ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றுக்கு முன் பணமாக அரசினால் வழங்கப்பட்டது. ஆனால் ஒரு பறவை பசு கூட வந்து சேரவில்லை.

மொத்தக் கொடுப்பனவில் இருபது வீதமாகவே மேற்படி தொகை அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. ஆனால் அதன் மூலம் அரசுக்கு எந்த 02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

வருமானமும் கிடைக்கவில்லை.

முறையான சாத்தியக்கூறு ஆய்வு இல்லாமல், தேவையான நிதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமல், உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் இந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் கறவைப் பசுக்கள் நாட்டுக்கு வந்து சேரவேயில்லை.

சுமார் ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்குரிய விநியோகித்தருக்கு, மறு கொள் முதல் செயல்முறைகளுக்கு உட்படுத்தாமல் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் முன்பணம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

உரிய ஒழுங்கு முறைகளைப் பின்பற்றாமல் இந்த 175 கோடி ரூபா முற்பணக் கொடுப்பனவை அங்கீகரித்தமைக்கு பொறுப்பானவர்கள் மீது சட்ட, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கணக்காய்வுக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அவர்கள் மீது இனி சட்டம் பாயும் என எதிர்பார்க்கலாம்.

* * *

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டத்தை முற்றாக இல்லாதொழிக்கும் சட்ட மூலம் ஒன்றை நாடாளுமன்றுக்குக் கொண்டுவர இருப்பதாக அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்தது.

இது தொடர்பான சட்ட மூலத்தைத் தயாரிக்கும் பணி சட்ட வரைஞர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாக பொதுப் பாதுகாப்பு, நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

இந்தச் சட்டம் ஏற்கனவே ஓய்வூதியங்களை பெற்று வரும் முன்னாள் எம்.பிகளுக்கான அந்தக் கொடுப்பனவை இல்லாமல் ஆக்குமா என்பது சந்தேகத்திற்குரியதே. முன்னர் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியங்களை இல்லாமல் செய்யும் விதத்தில் சட்டமூலம் வருமானால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்காட கூடிய சூழல் அதிகம் உள்ளது.

தற்போது ஆட்சியை நடத்தும் தேசிய மக்கள் சக்தி அரசின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியைச் சேர்ந்த சுமார் ஐம்பது முன்னாள் எம்.பிக்கள் இப்போதும் இந்த ஓய்வூதியத்தைப் பெற்று வருகிறார்கள். அவர்களுள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் அவரது அரசின் மூத்த அமைச்சர்கள் பலரும் அடங்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

* * *

உள்ளூராட்சி சபைகளில் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்காக ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்த முயன்ற புளொட் தலைவர் சித்தார்த்தன், அது பற்றிய செய்தியை 'முரசு' முற்கூட்டியே வெளியிட்டமையால் அந்த முயற்சியில் இருந்து ஜாகா வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பாட்டார் என்பது தெரிந்த விடயம்தான்.

அந்த விவகாரத்தை ஒட்டி தமக்கு விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று காட்டுவதற்காக 'முரசு' பத்திரிகையை குறை காணும் விதத்தில் அவர் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றை வழங்கி இருக்கிறார் என தகவல் கிடைத்தது. அது பற்றிய சில விளக்கங்களை அவருக்கும் வாசகர்களுக்கும் நாளை தரலாம் என்று நினைக்கிறேன். அதுவரைப் பொருத்தருள்க...!

---

**ஆற்றில் தவறி...**

ஆற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

காலை வேளையில் வீட்டில் இருந்து தனியாக வெளியேறிய சிறுவன், ஆற்றங்கரை பகுதியை நோக்கிச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அவ்வேளை, ஆற்றின் கரையில் அவர் நின்ற போது தவறி நீரில் வீழ்ந்துள்ளார்.

சிறுவன் வீடு திரும்பாமல் இருப்பதைக் கவனித்த பெற்றோர், உறவினர்கள் மற்றும் அயலவர்களின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில், சம்பவ இடத்தை அண்மித்து பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமரா காட்சிகளைப் பார்வையிட்ட போது. இதில், ஆற்றை அண்மித்து அமைந்துள்ள கமராக்களில் சிறுவன் தனியாக நடந்து செல்வது மற்றும் ஆற்றங்கரையை நோக்கிச் செல்லும் காட்சிகள் தெளிவாகப் பதிவாகியிருந்தன.

அதன் அடிப்படையில், பிரதேச மக்கள், ஆற்றில் தீவிர தேடுதல்களை மேற்கொண்டனர். தேடுதலின்போது, சிறுவன் உயிரிழந்த நிலையில் ஆற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

**ஐ.நா. மனித...**

கொழும்பு வருகின்றார்.

26 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கி இருக்கத் திட்டமிட்டுள்ள அவர்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹறிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் உள்ளிட்ட அரச தரப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

அவர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் கொழும்பில் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரையும் இந்த விஜயத்தின் போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் எனப் பல தரப்பு கலந்துரையாடலையும் அவர் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலையகச் சிவில் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின்போது, மலையக மக்கள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் சென்று, நிலைமைகளை ஆராயவுள்ளதுடன், போரின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் சந்திக்கவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத் தொடரில் இலங்கை குறித்து வலுவானதொரு தீர்மானம் பிரிட்டன் தலைமையில் முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

**செம்மணி...**

"செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்படும் அகழ்வாராய்ச்சியின் போது கண்டறியப்படும் அனைத்து மனித எச்சங்களும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். அதன்பின்னர் பகுப்பாய்வு அறிக்கைகளின் பிரகாரமே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கூற முடியும்.

நீதிமன்றத்தின் அனுமதியில் குறித்த பகுதியில் தொடர்ச்சியாக அகழ்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அது குறித்து வழக்குகளும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. ஆகவே, நீதிமன்றம்தான் இறுதியான முடிவை எடுக்கும்.

எவ்வாறாயினும் உண்மைகள் கண்டறியப்படுவதற்காகத் தொடர்ச்சியான அகழ்வுப் பணிகளுக்காக நிதி வழங்கல் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் அரச தரப்பில் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதோடு விசேட கரிசனைகளையும் கொண்டிருக்கின்றோம்." – என்றார்.



# நாடு திரும்பும் அகதிகளுக்கான உதவி குறித்து இலங்கை அரசுடன் பேசினேன்

## சுமந்திரனிடம் இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

"இந்தியாவில் இருந்து மீண்டும் நாடு திரும்பும் அகதிகளுக்கான இருப்பிட மற்றும் வாழ்வாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து இலங்கை அரசுடன் கலந்துரையாடியுள்ளேன்."

– இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அண்மையில் தமிழகத்தில் உள்ள அகதி முகாமில் இருந்து நாடு திரும்பிய 75 வயதுடைய முதியவர் ஒருவர் பலாலி விமான நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவம் குறித்து இந்தியத் தூதுவரிடம் சுமந்திரன் எடுத்துரைத்தார்.

அதுமாத்திரமன்றி இந்திய அகதி முகாம்களில் உள்ள சுமார் 10 ஆயிரம் இலங்கை அகதிகள் மீண்டும் நாடு திரும்புவதற்கு விண்ணப்பித்திருப்பது பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதனைச் செவிமடுத்த இந்தியத் தூதுவர், மீண்டும் நாடு திரும்பும் அகதிகளுக்கு அவசியமான இருப்பிட மற்றும் வாழ்வாதார உதவிகளை இலங்கை அரசு செய்து கொடுக்க வேண்டும் எனவும், இது பற்றி அரசுடன் கலந்துரையாடியிருப்பதாகவும் தெரிவித்தார்.




# யாழில் விபத்து; இருவர் காயம்!!

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

சைக்கிளில் வந்த இருவர் மீது வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.



# பாடசாலை மாணவர்களுக்கே டெங்கு நோயால் அதிகம் பாதிப்பு

நாடளாவிய ரீதியில் பதிவான டெங்கு தொற்றாளர்களில் அதிகளவானோர் ஐந்து முதல் 19 வயதிற்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் என சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய டெங்கு மற்றும் சிக்குன் குன்யா நோய் தொடர்பில் அனைத்து மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்குவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளுக்குக் கள ஆய்வு களை மேற்கொள்ளும் போது டெங்கு பெருக்கம் உள்ள இடங்கள் அடை யாளங் காணப்பட்டால் பாடசாலை அதிபரே பொறுப்பேற்க வேண்டும்.

அதன்படி, அவர்கள் சட்ட நடவடிக் கைகளுக்கும் முகங்கொடுக்க நேரி டும் எனவும் கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது.

பாடசாலை நேரங்களில் கைகள் மற்றும் கால்களை மறைக்கும் ஆடை களை அணிவதன் அவசியம் குறித் தும் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

டெங்கு மற்றும் சிக்குன்குன்யா நிலைமை குறித்து கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத் துரைத்த வைத்திய நிபுணர் அதுல லியனபத்திரன இந்த நோய் நிலை மைகள் குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தெரிவித்தார்.

காய்ச்சல், வாந்திபேதி, கை மற்றும் கால் வலி என்பவை ஏற்பட்டால் உடனே வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும் என தெரிவித்தார்.

அத்துடன், சிக்குன்குன்யா வைரஸ் தொற்றினால் ஏற்படும் உடல் வலிக ளைக் குறைப்பதற்காக வலிநிவாரண மாத்திரைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் பெரசிடமோல் மாத் திரைகளை உட்கொள்ளுமாறும் வைத் திய நிபுணர் அதுல லியனபத்திரன தெரிவித்துள்ளார்.



# சுற்றுலா கேந்திர நிலையங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

சுற்றுலா கேந்திர நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக அனைத்து மாகாணங்களிலும் யோசனைகள் கோரப்பட்டுள்ளன.

அபிவிருத்திக்கான உரிய வேலைத் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் 4 சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சுமார் 2 தசாப்தங்களாக நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்கள் உரிய திட்டத் திற்கமைய அபிவிருத்தி செய்யப்பட வில்லையென பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி இடங்களை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் பிரதான பணியாகும் பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.




# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகின்றனர் ஆசிரியர்கள்

தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி இளங்கலைப் பட்டம் பெற்ற ஏராளமானோருக்கு முறையான முறைமை இல்லாமல், அரசாங்கம் ஆசிரியர் நியமனங்களை வழங்கி வருவதாக ஆசிரியர் மற்றும் அதிபர்கள் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

இந்த நியமனங்கள் தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும் எனவும், இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



# கொவிட் 19 பரவல் குறித்து வீண் அச்சம் வேண்டாம்

## சுகாதார அமைச்சு மீண்டும் வலியுறுத்தல்

கொவிட் 19 பரவல் குறித்து வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார அமைச்சு பொதுமக்களை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் வைத்தியர் நிபுணர் அதுல லியனபத்திரன இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது பரவிவரும் கொவிட் 19 திரிபுகளுக்குக் கடுமையான நோய் நிலைமைகளை ஏற்படுத்தக் கூடிய இயலுமைகள் கிடையாது.

2023 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், கொவிட் தொற்றை சாதாரணமாக ஒரு சுவாச நோயாக உலக சுகாதார நிறுவனம் வகைப்படுத்தியுள்ளது.

சாதாரண சுவாச நோய்க்கான அறிகுறிகள் மற்றும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துவதைக் காட்டிலும், வேறு எந்த அறிகுறிகளையும் கொண்டிராததமையினால் சுவாச நோய்களில் ஒன்றாக கொவிட் வகைப்படுத்தப்படுகிறது.

எனவே, சுவாச நோய்களைக் கொண்டிருக்கும் ஒருவர், சுவாசிப்பதில் சிரமத்தை எதிர்கொண்டால் மாத்திரமே மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவது பொருத்தமானதாக இருக்கும் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் வைத்திய நிபுணர் அதுல லியனபத்திரன தெரிவித்துள்ளார்.



# பொது மன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்திய அனுராதபுரம் சிறைச்சாலை கண்காணிப்பாளர் கைது

ஜனாதிபதியின் பொது மன்னிப்பைப் பயன்படுத்தி கைதியை விடுவித்த விவகாரத்தில், அனுராதபுரம் சிறைச்சாலை கண்காணிப்பாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை முறைகேடான வகையில் பயன்படுத்தி சில சிறைக்கைதிகளை விடுவித்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசேட விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த முறைகேடான செயற்பாட்டுடன் தொடர்புடைய சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட அதனுடன் தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அனுராதபுரம் சிறைச்சாலை கண்காணிப்பாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.



# பொதுமன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் சி.ஐ.டி. விசாரணைகள் ஆரம்பம்

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை முறைகேடான வகையில் பயன்படுத்தி சில சிறைக்கைதிகளை விடுவித்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசேட விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த முறைகேடான செயற்பாட்டுடன் தொடர்புடைய சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட அதனுடன் தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி கடந்த விசாக பூரணை தினத்தின் போது சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் நீண்ட விசாரணை முன்னெடுத்து, வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆணையர் வருகையும் எதிர்ப்பும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் எதிர் வரும் 23 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை உத்தியோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டு இலங்கைக்கு வருகை தர வுள்ளார்.

அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட அரச தரப்பினரையும் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேம தாஸ, சிறுபான்மைக் கட்சிகளின் பிரதி நிதிகள், மனித உரிமைகள் செயல்பாட் டாளர்கள் என பலதரப்பையும் சந் தித்து இலங்கையின் பொறுப்புக்கூறல் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாட உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அவர் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக் கும் சென்று நேரடியாக நிலைமைகளை ஆராய உள்ளமையுடன், உள்நாட்டு போரின் போது வலிந்து காணாமலாக் கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித் திக்கவும், விஜயத்தின் இறுதியில் கொழும்பில் ஊடகவியலாளர்களை சந் திக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிகின்றது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இடம் பெறவுள்ள ஜெனிவா மனித உரிமை கள் மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங் கைக்கு எதிரான தீர்மானம் முன்வைக்கப் பட உள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கைக்கு விஜயம் மேற்கொள் கின்றமை குறித்து அரசாங்கம் கூடுதல் அவதானம் செலுத்தியுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் அவரது வருகைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்நாட்டில் இயங்கிவரும் 104 சிவில் சமூகப்பிரதி நிதிகளின் கூட்டு, சர்வதேச மனித உரி மைகள் அமைப்புக்களின் கூட்டு, தமிழ் சிவில் சமூக அமையம் மற்றும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட் டோரின் உறவுகள் ஆகிய நான்கு தரப்புக் கள் தனித்தனியாக நான்கு கடிதங்களை உயர்ஸ்தானிகருக்கு அனுப்பிவைத் துள்ளன எனத் தெரிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யின் எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொடருடன் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முடிவுக்குவரவுள்ள நிலையில், அதற்கு முன்பதாக மனித உரிமைகள் உயர்ஸ் தானிகர் நாட்டுக்கு வருகை தருவது செப்டெம்பரில் அவர் வெளியிட வுள்ள இலங்கை தொடர்பான அறிக்கை யின் காத்திரமான தன்மையை மலி னப்படுத்தும் எனும் கரிசனையின் அடிப்படையிலேயே சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பா ட்டாளர்களும், பாதிக்கப்பட்ட தரப் பினரும் அவரது வருகைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

ஆயினும், உயர்ஸ்தானிகரின் இலங்கை விஜயமானது எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொ டரில் அவர் வெளியிடவிருக்கும் அறிக்கையை எவ்விதத்திலும் மலி னப்படுத்தாது எனவும், உயர்ஸ்தா னிகர் அலுவலகம் பாதிக்கப்பட்ட தரப்பினரின் கரிசனைகளுக்கு விரோத மாக செயற்படாது எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்ஞ்சே கூறியிருக்கின்றார் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இலங்கை குறித்து வலுவானதொரு பிரேரணை பிரித்தானியா தலைமை யில் முன்வைக்கப்பட உள்ளது. இந்த நெருக்கடியை தவிர்க்கும் வகையில், நட்பு நாடுகள் பலவற்றுடன் அரசாங் கம் கலந்துரையாடல்களை ஆரம்பித் துள்ளது. இருப்பினும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய் தல், வலிந்து காணாமலாக்கப்பட்ட வர்களுக்கான பொறுப்புக் கூறல், போர் குற்றச்சாட்டுக்களை விசாரித்து உண்மையை கண்டறிதல் மற்றும் மீள்நிகழாமையை உறுதி செய்தல் என்பன தொடர்பில் இலங்கை மீது சர்வதேசத்தின் அழுத்தங்கள் கடு மையாக உள்ளமை இலங்கைக்குப் பெரும் நெருக்கடி தரும் விவகாரமாக மாறக்கூடிய சாத்தியங்கள் தீவிரமாகி வருகின்றன என்றே தோன்றுகின்றது.



# வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயத்தில் சிறப்புற நடைபெற்ற மகா கும்பாபிஷேகம்

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற சின்னக் கதிர்காமம் என்றழைக்கப்படும் திருகோணமலை, வெருகல் – வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீசித்திர வேலாயுதர் சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் விசுவாவசு வருடம் வைகாசித் திங்கள் 25ஆம் நாளாகிய நேற்று ஞாயிற்றுக்கிழமை பிரதிஷ்ட பிரதம குருவான அச்சுவேலி சிவாகம கலாநிதி

சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது விநாயக வணக்கத்துடன் விஷேட திரவிய ஹோம மஹாயாகம் இடம்பெற்றது.

அத்தோடு பிள்ளையார், முருகனுக்கான கும்பமும் பக்தர்களின் அரோகரா கோசத்துடன் வெளி வீதி உலா வந்தது. இதன் பின்னர் அந்தண சிவாச்சாரியார்களால் கிரியைகள் நடத்தப்பட்டு ராஜகோபுரத்திற்கு பிரதான கும்பநீர் சொரியப்பட்டது.

இதன் பின்னர் இறுதியாக கும்பாபிஷேகம் இடம்பெற்றது. அபிசேகத்தின் போது பல்லாயிரக்கணக்கான சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய முருக பக்தர்கள் கலந்துக்கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

16 வருடங்களுக்கு பின்னர் நடைபெற்ற வெருகல் ஸ்ரீசித்திர வேலாயுதர் சுவாமி தேவஸ்தானத்தின் கும்பாபிஷேகத்தில் அதிகளவான சைவ பக்த அடியார்கள் கலந்து கொண்டு முருகன் அருள் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்றுப் பஞ்ச ரத உற்சவம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவின் பஞ்சரதோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்திபிர்வமாக இடம் பெற்றது.

உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜைகள், தீபாரதனைகள் இடம் பெற்றமையைய் தொடர்ந்து உள் வீதி உலா வந்த மூர்த்திகள், தொடர்ந்து தேரில் எழுந்தருளி, மக்கள் வடம் பிடித்து இழுக்க வெளி வீதி உலா வந்தனர்.

அதனை தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் பச்சை சார்த்தப்பட்டு ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டனர்.

கடந்த மாதம் 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்ற மகோற்சவத்தில் நேற்றைய தினம் தேர் திருவிழா மிக விமர்சையாக ஆலயத்தின் பிரதம குரு தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

இவ் உற்சவத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய தினம் தீர்த்த திருவிழாவும், உற்சவமும் இடம் பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.























- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)

# வைகாசி விசாகம் மகத்துவம் மிக்கது !

**(இன்று வைகாசி விசாகம். அதையொட்டி இக்கவிதை இன்று பிரசுரமாகின்றது)**

அழகன் முருகன் அமரும் இடங்கள்
அடியார் சூழ்ந்து தொழுது நிற்பார்
பாடிப் பரவி பரவசப் படுவார்
பரமன் மைந்தன் அருளைப் பொழிவான்

பரமன் நெற்றிக் கண்ணின் பொறியே
குமரன் பிறப்பின் தத்துவம் ஆனது
வைகாசி விசாகம் குமரன் பிறந்தான்
மாநில மெங்கணும் விசாகம் உயர்ந்தது

வைகாசி விசாகம் மகத்துவம் மிக்கது
விரதம் இருப்பது முக்கியம் ஆனது
வேண்டிய காரியம் விரைவில் வந்திட
விரதம் இருந்து வேண்டுவார் முருகனை

கலியுகத் தெய்வம் கந்தனாய் தெரிகிறார்
கஷ்டங்கள் போக்கிட கந்தனே வருவார்
நம்பிடும் அடியார் கும்பிட்டு நிற்கிறார்
குமரன் குறைகளைப் போக்கியே நிற்பார்

விசாகத் திருநாள் வெற்றியை அளிக்கும்
வேலவன் திருவடி வினைகளை அகற்றும்
தேவரைக் காத்த திருக்கை வேலன்
விசாக ரூபனாய் வெளிச்சமாய் தோன்றினான்

பாலனாய் இருப்பான் விருத்தனாய் இருப்பான்
பார்க்கு மிடமெல்லாம் பரவியே இருப்பான்
கோலமா மஞ்ஞையில் ஏறியே வருவான்
குன்றுகள் தோறும் அமர்ந்திடும் குமரன்

நம்பிக்கை என்பது நன்மையே நல்கும்
நாளும் கோளும் வந்தே போகும்
ஒவ்வொரு நாளுமே உத்தம நாளே
உணர்த்திடும் நெறியே உயர் நெறியாகும்

நமது முன்னோர் நல்லதை நினைத்தனர்
படைத்தவன் நினைப்பை உணர்த்திட விளைந்தனர்
ஒவ்வொரு நாளையும் உயர்வுடை ஆக்கிட
உள் உணர்வுடனே இறையுடன் இணைத்தனர்

வைகாசி விசாகம் வளமுடை நாளே
மனதினில் நல்லதை விதைத்திடு நாளே
குமரக் கடவுளை கொண்டாகிம் நாளே
நம்பிக்கை என்றுமே நம்மைக் காத்திடும்



# திருமலை முத்துக்குமாரசுவாமி ஆலயத் தேர்



**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை முத்துக்குமார சுவாமி ஆலய வருடார்ந்த மஹோற்ஸவத்தின் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன்போது முருகப் பெருமான் விசேட பூசையுடன் தேருக்கு அழைத்து வரப்படுவதையும், பக்தர்கள் புடைசூழ தேரில் உலா வருவதையும், மாணவிகளின் இசை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.










# கிண்ணியாவில் கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் வீடு ஒன்றை துவம்சம்

## 15க்கும் மேற்பட்ட தென்னை மரங்களும் நாசம்

(ஹலால்தீன்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மஜித் நகர் கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் வீடு ஒன்றைச் சேதமாக்கி உள்ளது. 15க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், வாழை மரங்கள் முதலானவற்றை துவம்சம் செய்துள்ளது.

கிராமத்துக்குள் தொடர்ந்து பிரவேசிக்கும் யானைகளினால் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு புகுந்த யானை வீடு ஒன்றை முழுமையாக சேதப்படுத்தியதோடு வீட்டுக்குள் வைக்கப்பட்ட அனைத்து பொருள்களையும் நாசம் செய்துள்ளது.



சமைப்பதற்கு வைத்திருந்த பாத்திரங்கள், மின்விசிறி, கட்டில் படுக்கையறை என்பனவற்றையும் யானைகள் துவம்சம் செய்துள்ளன.


இதேவேளை காய்க்கும் நிலையில் உள்ள 15க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், வாழை மரங்கள் என்பனவற்றையும் நாசப்படுத்தி உள்ளன.

தொடர்ந்து இந்த யானைகளினால் பாரிய பிரச்சினை ஏற்படுகின்றன. இரவில் காவல் காப்பதும் பெரும் கஷ்டமாக உள்ளது. யானை வேலி அமைத்தும் பாதுகாப்பு இல்லை. அதனை உடைத்து அவை உள்ளே வருகின்றன எனக் கூறப்படுகின்றது..





# இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க வேண்டும் அமித் ஷாவிடம் மதுரை ஆதீனம் மனு கையளிப்பு



மதுரை சென்ற வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம், இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க வேண்டும் என மதுரை ஆதீனம் மனு அளித்துள்ளது.

மதுரையில் நடைபெற்ற பா.ஜ.க. மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மதுரை சென்றார். அவர் நேற்று காலை மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு சென்று வழிபட்டார். முன்னதாக மீனாட்சியம்மன் கோயிலுக்கு சென்ற அமித் ஷாவை மதுரை ஆதீனம் சார்பில் சால்வை அணிவித்து வரவேற்று புத்தகம் மற்றும் மனு வழங்கப்பட்டது.

பின்னர் மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கூறுகையில்,

“பிரதமர் மோடி மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வரும்போதும் அவரை சந்தித்து பேசினேன். இப்போது உள்துறை அமைச்சர் அமித் ஷா வந்துள்ளார். அவரை கோயில் முன்பு வரவேற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. அமித் ஷாவிடம் மனு ஒன்றை அளித்தேன். அதில் இலங்கையில் தமிழர்களுக்கு தனி நாடு ஏற்படுத்த வேண்டும், கச்சதீவை மீட்டு இந்தியாவுடன் சேர்க்க வேண்டும். இந்திய மீனவர்கள் தாக்கப்படாமல் இருக்கவும், மீனவர்கள் பிரச்சினையை தீர்க்கவும் உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்எனக்கோரிக்கை வைத்துள்ளேன்.” – என்றார்.

# தி.மு.கவை தோற்கடிக்க மக்கள் காத்திருக்கிறார்கள்

## மதுரையில் அமித் ஷா பேச்சு

“தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அமித்ஷாவால் தி.மு.கவை தோற்கடிக்க முடியாது என்று கூறுகிறார். அவருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னால் தோற்கடிக்க முடியாமல் இருக்கலாம், ஆனால் தமிழக மக்கள் தி.மு.கவை தோற்கடிக்க காத்திருக்கிறார்கள்.”

– இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசியுள்ளார்.

மதுரை ஒத்தக்கடையில் பா.ஜ.க. மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“மதுரை பலவிதமான மாற்றங்களுக்கு வித்திடும் மண். அந்தவகையில், இன்று நடந்துள்ள இந்த ஆலோசனைக் கூட்டமும், தி.மு.க. ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து வீட்டுக்கு அனுப்பும் மாற்றத்தைக் கொண்டு வரும். 2026 சட்டமன்றத் தேர்தலில், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பா.ஜ.க – அ.தி.மு.க. கூட்டணி ஆட்சி அமைக்கும். நான் நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், என்னுடைய செவியும் சிந்தையும் தமிழகத்தின் மீதுதான் இருக்கிறது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அமித் ஷாவால் தி.மு.கவை தோற்கடிக்க முடியாது என்று கூறுகிறார். அவருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னால் தோற்கடிக்க முடியாமல் இருக்கலாம், ஆனால் தமிழக மக்கள் தி.மு.கவை தோற்கடிக்க காத்திருக்கிறார்கள். என்னுடைய நீண்டகால




அரசியல் அனுபவத்தில் கூறுகிறேன், தமிழக மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்து கூறுகிறேன், வரும் சட்டமன்றத் தேர்தலில், தமிழக மக்கள் தி.மு.கவை தூக்கியெறிய காத்திருக்கிறார்கள்.

நம் நாட்டின் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதையடுத்து, ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு தமிழகத்தில் இருந்து நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் வகையில் மிகப்பெரிய எழுச்சியும், ஆதரவும் எழுந்ததை நான் நினைவுகூற விரும்புகிறேன். பஹல்காமில் அப்பாவி மக்களை, மதத்தின் பெயரால் சுட்டுக்கொன்ற பாகிஸ்தான் பயங்கரவாதிகளை, முப்படைகளைத் திரட்டி, பிரதமர் மோடி அவர்களுடைய நாட்டுக்குள் சென்றே தாக்குதல் நடத்தினார். அதுதான் அவர்களுக்கு நாம் புகட்டிய பாடம்.

இதற்கு முன்பும் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தங்களது கைவரிசையைக் காட்டியிருந்தார்கள். ஆனால், இது போன்ற தாக்குதல்களை நாட்டை ஆண்ட முந்தைய அரசு நடத்தியது இல்லை. ஆனால், புரி, புல்வாமா மற்றும் தற்போது நடந்துள்ள ஒபரேஷன் சிந்தூர் வரை முப்படைகளும் சேர்ந்து நமது தேசத்தின் வீரதீரத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. பாகிஸ்தானுக்குள் 100 கிலோ மீற்றர் பறந்து, பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இடங்களைத் துல்லியமாகதாக்குதல்நடத்தி, அவர்களுடைய இருப்பிடங்களை மண்ணோடு மண்ணாக்கியது இந்திய இராணுவம்.

பிரதமர் மோடியின் ஆட்சியில் அனைத்து திட்டங்களும் எப்படி சிறப்பாக செயல்படுத்தப்படுகிறதோ, அதேபோல் தான் இராணுவமும் தன்னிறைவான நிலையைப் பெற்றுள்ளது. அதனால் தான் இந்திய இராணுவம் மிகச் சிறப்பாக செயல்பட்டிருக்கிறது. ஒபரேஷன் சிந்தூர் குறித்து நாம் அனைவரும் பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இந்தியாவின் வான்வெளி சாதனைகள் குறித்து சொல்ல வேண்டியிருக்கிறது. நாட்டின் இளைஞர்கள் காவிரி இன்ஜின் என்ற சொல்லை இப்போது கூறத் தொடங்கி உள்ளனர்.

பாகிஸ்தான் தன்னுடைய ட்ரோன்களையும், ஏவுகணைகளையும் நம் நாட்டின் மீது ஏவத் தொடங்கிய போது, இந்தியாவின் வான்வெளி வல்லமை உலக நாடுகளுக்கு எல்லாம் பறைசாற்றும் வகையில், பாகிஸ்தான் அனுப்பிய அனைத்தையும் அடித்து தூள் தூளாக்கியது இந்திய இராணுவம். ஒபரேஷன் சிந்தூர் இன்னும் முடியவில்லை என்று நம் பிரதமர் கூறியிருக்கிறார். பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மீண்டும் வாலாட்டினால், அவர்களுடைய இருப்பிடங்களுக்கே சென்று தாக்குதல் நடத்தப்படும் என்று பிரதமர் மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.” – என்றார்.



# கொலம்பியாவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஜனாதிபதி வேட்பாளரின் நிலை கவலைக்கிடம்



கொலம்பியாவில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொலம்பியாவின் தலைநகரான பொகொட்டவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றின் போதே இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மிகுவல் யூரிப் டர்பே எனப்படும் 39 வயதுடைய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளார்.

இந்த சம்பம் தொடர்பில் 15 வயதுடைய சிறுவன் ஒருவரை அந்நாட்டு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானவரின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வருடம் கொலம்பியாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய்வானின் கடலோர காவல் படையும் இராணுவமும் இணைந்து விசேட பயிற்சி



தாய்வானின் கடலோர காவல் படையும், இராணுவமும் இணைந்து நேற்று விசேட பயிற்சிகளை மேற்கொண்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தாய்வான் தீவை தமது சொந்த பிரதேசமாக உரிமை கோரி, சீனா மேற்கொள்ளும் அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில், அதனை எதிர்கொள்ளும் வகையிலேயே இந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ஆட்சியின் கீழ் இயங்கும் தாய்வான், சீனாவுடன் நேரடி மோதலை தவிர்க்கும் வகையில் தீவைச் சுற்றி கடலுக்கடியில் கேபிள் வெட்டுதல் மற்றும் மணல் அள்ளுதல் போன்ற நடவடிக்கைகளுக்குச் சீனா அதிருப்தியை வெளியிட்டு வரும் நிலையில் இந்த கூட்டுப் பயிற்சி நடைபெறுகின்றது.

தாய்வான் தீவின் துறைமுக நகரமான காவோசியுங்கில், ஜனாதிபதி லாய் சிங்-டேயின் மேற்பார்வையில் இந்த பயிற்சிகள் இடம்பெறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# அமெரிக்காவில் புதிய கட்சியை தொடங்கியுள்ளார் எலான் மஸ்க்

எலோன் மஸ்க் அமெரிக்காவில் புதிய கட்சியொன்றைத் தொடங்கவுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்த கட்சிக்கு "தி அமெரிக்கன் பார்ட்டி" என பெயரிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எலோன் மஸ்க் தனது எக்ஸ் தளத்தில் அண்மையில் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தினார்.

அதில் அமெரிக்காவில் 80 சதவீத நடுத்தர மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு புதிய கட்சி தேவையா? என கேள்வியொன்றை எழுப்பியிருந்தார்.

இதற்கு 80 சதவீத மக்கள் "ஆம்" என பதிலளித்துள்ளனர்.

இந்தநிலையில் எலோன் மஸ்க் "தி அமெரிக்கன் பார்ட்டி" என்ற பெயரில் கட்சியொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

# இன்றைய ராசி பலன்கள் -09.06.2025




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்துக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்தநேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -09.06.2025




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இருவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவுக்கும் சேமிப்புக்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.

தூக்கமின்மை மற்றும் பதற்றம் காரணமாக தலை வலி காணப்படும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களைத் தீட்டுங்கள்.


பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# அரச பொசன் நிகழ்வை முன்னிட்டு 3,500 பொலிஸார் பாதுகாப்பு கடமை



அரச பொசன் நிகழ்வை முன்னிட்டு அனுராதபுரத்தை அண்மித்த பகுதிகளில் 3,500 பொலிஸ் அதிகாரிகளை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து கடமைகள் மற்றும் குற்றங்களை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாவி மற்றும் நீர்த்தேக்கங்களை அண்மித்த பகுதிகளில் விசேட உயிர் பாதுகாப்பு அதிகாரிகளை கொண்ட குழுக்கள் சிலவற்றை ஈடுபடுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளை சுத்தப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கழிவுப்பொருள்களை அகற்றுவதற்காக 500 இற்கும் மேற்பட்ட குப்பைத் தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.